செ.வெ.எண். 67/மார்ச் தேதி : 28.03.2017

# தருமபுரி மாவட்டத்தில் குடிநீர் பற்றாக்குறையை கிராம அளவில் சமாளிப்பது தொடர்பான ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





தருமபுரி மாவட்டம், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கலையரங்கத்தில் குடிநீர் பற்றாக்குறையை கிராம அளவில் சமாளிப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.03.2017) நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததினால் குடிநீர் பற்றாக்குறை நிலை ஏற்பட்டு உள்ளது. ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் வரத்து குறைவாக உள்ளது. மாவட்டத்தில் உள்ள எட்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் குடிநீர் பற்றாக்குறையினால் பாதிக்கப்படும் பகுதிகள் கண்டறியப்பட்டு, உடனுக்குடன் மோட்டார் பழுதுகள் சரி செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குடிநீர் பற்றாக்குறையினை போக்க 2016-17ம் ஆண்டில் பொது நிதி மற்றும் மாநில பேரிடர் நிவாரண நிதி மற்றும் ஊரக உள்கட்டமைப்பு வசதி நிதி திட்டங்களிலிருந்தும் 553 குடிநீர் பணிகளுக்கு ரூ.10.26 (ரூபாய் பத்து கோடியே இருபத்து ஆறு இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

சென்ற ஆண்டுகளில் மாவட்டத்தில் பல திட்டங்களின் மூலம் குடிநீர் பணிகள் செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிலுவையில் உள்ள குடிநீர் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை முடிப்பதின் மூலம் குடிநீர் பற்றாக்குறையினை சமாளிக்க முடியும்.

பொதுமக்கள் குடிநீரினை சிக்கனமாக பயன்படுத்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இன்றைய நிலவரப்படி, ஒகேனக்கல்லில் நீர்வரத்து குறைவாக உள்ளதால், ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து வழங்கப்படும் குடிநீரை சிக்கனமாகவும் உள்ளூரில் உள்ள குடிநீர் ஆதாரங்களை கொண்டு பயன்படுத்தவும் அறிவுரை வழங்கப்பட்டது.

அனைத்து திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் பணிகளை விரைந்து முடிக்கவும் கண்காணிக்கவும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் முறையாக குடிநீர் தொட்டிகளை குளோரினேசன் செய்யப்பட வேண்டும் எனவும் முறையாக குடிநீரை விநியோகிக்க வேண்டுமென மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டடத்தில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. எம். காளிதாசன், ஒகேனக்கல் குடிநீர் திட்ட செயற்பொறியாளர், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) , உதவி இயக்குநர் (தணிக்கை), வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி செயலர்கள், அனைத்து மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி இயக்குபவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.